அகவிலைப்படி மானியத்தின் நிதிநிலைக் குறைவால் இடர்ப்படும் ஊராட்சி ஒன்றிய குழுக்களுக்கு முன்னதாக அளிக்கப் பள்ளிக் கல்வித்துறை இயக்குனரை அனுமதித்து அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்தது.

இதற்கிணங்க, இராதாபுரம், திருச்செந்தூர், வாசுதேவ நல்லூர், கடயம், உடன்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் 26–1–1969-ல் ஆணைகள் அனுப்பினர். மண்டபம் ஊராட்சி ஒன்றியக் குழு சம்பந்தமாக, சிறப்பு அகவிலைப்படி மானியம் 28–1–1969-ல் வழங்கப்பட்டது.

31—3—1969 தேதியுடன் முடிவுறும் அரையாண்டுக்காக முன்னதாகவே சிறப்பு அகவிலைப்படி மானியத்தை வழங்கவேண்டி, மண்டபம் உட்பட்ட பல ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடமிருந்தும் அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்தன. பள்ளிக் கல்வித்துறை இயக்குனரால் சிறப்பு அகவிலைப்படி மானியம் அளிப்பதற்கான புள்ளி விவரங்கள் தயாரிக்க பல ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தேவையான செலவு விவர அறிக்கையை குறித்த காலத்தில் அளிக்கவில்லையென்றாலும், வழிவகை நிதி நிலை மிகவும் இடர்பாடாக உள்ளதென்று தெரிவித்த ஊராட்சி ஒன்றிய குழுக்களுக்கு 19—2—1969-ம் தேதிக்கு முன்னரே, சிறப்பு அகவிலைப்படி மானியத்தை முன்கூட்டி வழங்கப் பள்ளிக் கல்வித்துறை இயக்குனருக்கு அரசாங்கம் தனி அனுமதி வழங்கியது. இதற்கு ஏற்ப, பள்ளிக் கல்வித்துறை இயக்குனர், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்கனவே ரூ. 45.53 லட்சம் வழங்கியுள்ளார். அவர் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்கும் முன் மானியத் தொகை ரூ. 1.32 லட்சம் வழங்கியுள்ளார்.

III. GOVERNMENT RESOLUTION

AMENDMENT TO NOTIFICATION UNDER SECTION 7 OF THE COTTON TRANSPORT ACT, 1923 (CENTRAL ACT III OF 1923)

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்---

“1923-ஆம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 111/1923) 7-வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் திருத்தி மாநில அரசாங்கம் வெளியிடும் அறிவிப்பின் கீழ்க்கண்ட வரைவிற்கு மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படலாம்.

வரைவு அறிவிப்பு

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ஆம் நாளன்று பிறந்து 25—12—1968 நாளிட்ட தமிழ்நாடு அரசாங்க இதழில் 1-ஆம் பாகத்தில் விதிகள் பிற்சேர்க்கையின் 899-902-ஆம் பக்கங்களில்

வெளியிடப்பட்ட **S.R.O. No. A.** 769/68-ஆம் எண் அறிவிப்பின் தோற்றுவாயில் கீழ்க்கண்ட திருத்தங்களைத் தமிழ்நாட்டு ஆளுநர் இதனால் செய்கிறார். 1923-ஆம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 111/1923) 7-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு இத்திருத்தங்கள் செய்யப்படுகின்றன. மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு இவற்றிற்கு சட்டமன்றத்தின் தீர்மானம் மூலம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்கூறிய அறிவிப்பின் தோற்றுவாயில், கீழ்க்கண்ட பாராவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது —

" 2. இதனால் செய்யப்படும் திருத்தங்கள் 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ஆம் நாளன்று செயலுக்கு வரும் '."

MR. CHAIRMAN : The question is—

" That the following draft of a Notification to be issued by the State Government under section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923) amending the Notification issued under the said section, be approved as required by section 8 of the said Act.

Draft Notification.

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Madras hereby makes the following amendments to the preamble to the Notification S.R.O. No. A-769 of 1968, dated the 8th October 1968, published at pages 899–902 of the Rules supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 25th December 1968, the same having been approved by resolutions of the Legislature as required by section 8 of the said Act.

Amendment.

In the preamble to the said notification, the following paragraph shall be added, namely—

' 2. The amendments hereby made shall come into force on the 1st February 1969.' "

The resolution was put and carried.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS

* **திரு. சா. கணேசன்** : *தலைவர் அவர்களே, நல்லுரை ஆற்றி, நமது சட்ட அவைகளை இயக்கிவைத்த, மேன்மைமிகு ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து அதன்*